NEWS RELEASE
SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

# ‘SURGE IN INFERTILITY TOO DUE TO PLANET DAMAGE BY MAN’

Chennai,
14.5.2022.

The surge in infertility cases and other communicable diseases is a stark reminder of the terrestrial imbalance caused by man in the name of development said Dr.Sudha Seshayyan, Vice Chancellor, Tamil Nadu Dr. M.G.R Medical University while delivering an oration at SMART alumni day event of the department of reproductive medicine and surgery of Sri Ramachandra Institute of Higher Education and Research here last night.

There is a hidden cost of human development and every step causes pathogenic spill over with viruses moving from one species to another and with rapid international travel endemic diseases become pandemic very quickly. Most of the zoonotic diseases where a bacterium or virus jumps from an animal to a human occur in high income countries. Most emerging diseases will be zoonotic. Therefore humans who commit the greatest damage to planet life should also rectify it by living in harmony with nature, she added.

Commending SRIHER for launching M.Ch in Reproductive Medicine and Surgery for the first time in India in 2012 she said with changes in life style there will be futuristic and ethical implications which should be kept in mind.

Dr. N.Sanjeeva Reddy who pioneered this course in SRIHER said many of the 14 M.Ch graduates so far spread all over India have started their own infertility centres bringing relief to childless couples.

Dr.Mahesh Vakamudi, Dean of Faculties, Dr.S.Anandan, Dean, Medical College and Dr.Radha Vembu, HoD, Reproductive Medicine and Surgery, SRIHER were among those who participated at the meeting.

………………..

Issued by: Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, Sri Ramachandra Institute of Higher Education and Research, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in.

SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

NEWS RELEASE

# “கருவுறாமைக்கும் ஒரு காரணம் மனிதனின் புவி அழிப்பே” - சுதா சேஷய்யன்

சென்னை, மே 14, 2022

தற்போது பெருகிவரும் கருவுறாமை மற்றும் பிற தொற்று நோய்களுக்கான முக்கியமான காரணம் மனிதன் மேம்பாட்டு பணிகள் என்ற பெயரில் புவியின் சுற்றுசூழலை காயப்படுத்துவதே என்று ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்கை கருத்தரிப்பு துறையின் முன்னாள் மாணவர்களின் 10வது ஆண்டு விழா கூட்டத்தில் பேசிய தமிழ்நாடு Dr. எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் Dr. சுதா சேஷய்யன் கூறினார். ஒவ்வொரு மனித மேம்பாட்டிற்கும் ஒரு விலை உண்டு, ஒவ்வொரு பணியினாலும் ஒரு உயிரினத்திலிருந்து மற்றொரு உயிரினத்திற்கு தீநுண்மிகள் பரவ வாய்ப்புள்ளன. தற்போது, பன்னாட்டு பயணங்கள்கூட வேகமாக பெருகிவரும் நிலையில் ஒரு இடத்தில் உள்ள நோய் நிலைமை உலகில் மற்ற பகுதிகளுக்கு கொரோனா பெருந்தொற்றுப் போல விரைவாக பரவுகிறது. விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் தீநுண்மிகள் பெரும்பாலும் மேம்பட்ட நாடுகளிலேயே தோன்றுகின்றன. இனிவரும் பெரும்பான்மையான நோய்களும் இப்படிப்பட்டவைகளாகவே இருக்கும். ஆகவே மனிதர்கள் புவியின் சுற்றுசூழலில் ஏற்படுத்திய பாதிப்புகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று கூறினார்.

செயற்கை கருத்தரிப்பு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவத்தில் எம்.செக். சிறப்பு உயர் பட்ட மேற்படிப்பை பத்தாண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவிலேயே முதன்முறையாக துவக்கிய ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக்கழகத்தை அவர் பாராட்டினார். அன்றாட மானிட வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் பெரும் மாற்றங்களால் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையும் நன்நெறி சவால்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மேலும் கூறினார்.

ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலையில் இதுவரை 14 பேர் எம்.செக் சிறப்பு உயர் பட்டப்படிப்பு பெற்று, பலர் நாடெங்கிலும் செயற்கை கருத்தரிப்பு சிகிச்சை மையங்களை சிறப்பாக நடத்தி குழந்தையில்லா தம்பதிகளுக்கு தீர்வு தந்துள்ளனர் என்று இந்த படிப்பைத் துவக்கிய Dr. N. சஞ்சீவ ரெட்டி கூறினார்.

நிகழ்ச்சியில் பலதுறைத் தலைவர் Dr. மகேஷ் வக்கமுடி, மருத்துவக்கல்லூரித் தலைவர் Dr. S. அனந்தன் மற்றும் இந்தத் துறையின் தலைவர் Dr. ராதா வேம்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-----------------------------------

Issued by: Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, Sri Ramachandra Institute of Higher Education and Research, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in.